கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 121 | 06-11-2025 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 121 | 06-11-2025 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## போக்சோ' சட்டம் தவறாக பயன்படுத்தப்படுகிறது சுப்ரீம் கோர்ட்டு கவலை

புதுடெல்லி, நவ.6–

சுப்ரீம் கோர்ட்டில், மூத்த வக்கீல் ஆபத் ஹர்ஷத் போண்டா ஒரு பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், "கற்பழிப்பு குறித்த சட்டங்கள், அவற்றில் செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்து மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனைகள் குறித்து 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச, கட்டாய கல்வி அளிக்க அனைத்து கல்வி நிறுவனங்களையும் கேட்டுக்கொள்ள வேண்டும். பாலியல் சமத்துவம், பெண்கள், சிறுமிகளுக்கான உரிமைகள், அவர்கள் கண்ணியத்துடன் வாழும் உரிமை ஆகியவை பற்றி விழிப்புணர்வை உறுதிசெய்ய பண்பு பயிற்சி சேர்க்கப்பட வேண்டும். சிறுவர்களின் மனநிலையை மாற்றும் நடவடிக்கைகள், பள்ளிக்கூட நிலையில் இருந்தே தொடங்கப்பட வேண்டும். கற்பழிப்பு குற்றம், அதற்கான தண்டனை, போக்சோ சட்டம் ஆகியவை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. இந்த மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, மத்திய அரசுக்கும், மத்திய கல்வி அமைச்சகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், திரைப்பட தணிக்கை வாரியம் ஆகியவற்றுக்கும் நோட்டீஸ் அனுப்பியது. இந்நிலையில், நேற்று நீதிபதிகள் பி.வி.நாகரத்னா, ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு மீண்டும் மனு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறோம். குடும்ப தகராறு, இளம் வயதினரிடையே பரஸ்பர சம்மதத்துடன் கூடிய பாலியல் உறவு போன்ற சம்பவங்களில் 'போக்சோ' சட்டம் தவறாக பயன்படுத்தப்படுகிறது. 'போக்சோ' சட்ட பிரிவுகள் குறித்து சிறுவர்களிடமும், ஆண்களிடமும் நாம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்" என்று நீதிபதிகள் கூறினர். தொடர்ந்து வழக்கின் விசாரணையை டிசம்பர் 2ந்தேதி நீதிபதிகள் ஒத்திவைத்தனர். ",

## பீகாரில் முதல் கட்ட சட்டசபை தேர்தலுக்கான ஓட்டுப்பதிவுக்கு ஏற்பாடுகள் தயார்",

"பாட்னா, நவ.6–

பீகார் மாநில சட்டசபைக்கு (6ம் தேதி மற்றும் 11ந்தேதிகளில்) 2 கட்டங்களாக தேர்தல் நடக்கிறது. மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் முதல் கட்டமாக 121 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்பட உள்ளது. இந்த 121 தொகுதிகளிலும் நேற்று மாலை 5 மணி முதல் அனல் பறந்த பிரசாரம் ஓய்ந்தது. நேற்று இறுதி நாளில் தேசிய ஜன நாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மத்திய மந்திரிகள் அமித்ஷா, ராஜ்நாத்சிங் அதிரடி பிரசாரம் மேற்கொண்டனர். பிரதமர் மோடி நேற்று செல்போன் செயலி மூலம் பா.ஜ.க. பெண் தொண்டர்களுடன் கலந்துரையாடினார். ஐக்கிய ஜனதா தளம் தலைவரும், முதல்மந்திரியுமான நிதிஷ்குமாரும் தீவிர ஓட்டு வேட்டை நடத்தினார். இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ராகுல் காந்தி 3 பொதுக்கூட்டங்களில் பேசினார். அந்த கூட்ட ணியின் முதல் மந்திரி வேட்பாளரான தேஜஸ்வி யாதவும் சூறாவளி பிரசாரம் செய்தார். பிரசாரம் ஓய்ந்த நிலையில் நேற்று மாலை 5 மணிக்கு பிறகு தொகுதிக்கு சம்பந்தம் இல்லாதவர்கள் வெளியேற்றப்பட்டனர். 121 தொகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. எல்லைகள் சீல் வைக்கப்பட்டு உள்ளன. இதையடுத்து (புதன்கிழமை) காலை வாக்குச்சாவடி பணியாளர்கள் தேர்வு செய்யும் பணி நடந்தது. அதன் பிறகு அவர்களிடம் வாக்குப்பதிவுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. அந்த உபகரணங்களுடன் வாக்குச்சாவடி பணியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு புறப்பட்டு சென்றனர். இன்று மாலை மாதிரி ஓட்டுப்பதிவு நடைபெற இருக்கிறது. இன்று இரவுக்குள் அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட ஓட்டுப்பதிவு நடக்கும் 121 தொகுதிகளிலும் 1,314 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்தியா கூட்டணியின் முதல்மந்திரி வேட்பாளரான தேஜஸ்வி யாதவ் ரகோபூர் தொகுதி, துணை முதல்மந்திரி சவுத்ரி போட்டியிடும் தாரப்பூர் தொகுதிகளில் முதல் கட்ட ஓட்டுப்பதிவு நடைபெற உள்ளது. 18 மாவட்டங்களில் உள்ள 121 தொகுதிகளிலும் அதிக வாக்குகள் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த 18 மாவட்டங்களிலும் 3.75 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் அச்சமின்றி வாக்களிப்பதற்காக 45,341 வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டு உள்ளன. அந்த வாக்குச்சாவடிகளை சுற்றி 3 அடுக்கு பாதுகாப்புகள் செய்யப்பட்டு உள்ளன. தேர்தல் அசம்பாவிதத்தை தடுப்பதற்கு 824 பறக்கும் படை உருவாக்கப்பட்டு உள்ளது. இதனால் பீகாரில் உச்சக்கட்ட பரபரப்பு நிலவு கிறது.",

## 14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பை போட்டி வெற்றிக் கோப்பையை அறிமுகப்படுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்..!!



14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பை போட்டி வெற்றிக் கோப்பையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார். தமிழ்நாட்டை பொறுத்தவரை விளையாட்டை வளர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை நடத்தி வருகிறது. அதன்படி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் ஹாக்கி இளையோர் 14வது உலக கோப்பை தொடருக்கான கோப்பையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்.

அத்துடன் உலகக் கோப்பை போட்டிக்கான காங்கேயன் இலச்சினையை முதலமைச்சர் வெளியிட்டார். தமிழ்நாட்டில், இளையோர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டி நவம்பர் 28ம் தேதி முதல் டிசம்பர் 10ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த போட்டிகள் சென்னை மற்றும் மதுரையில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியில், 24 அணிகள் 6 பிரிவுகளாகப் போட்டியிடுகின்றன. 'பி' பிரிவில் சிலி, இந்தியா, சுவிட்சர்லாந்து ஆகிய அணிகளுடன் இடம் பெற்றிருந்த பாகிஸ்தான் விலகியதால், ஓமன் அணி சேர்க்கப்பட்டுள்ளது.

# வேலூரில் மினி டைடல் பூங்கா திறப்பு; ராசிபுரத்தில் டைடல் பூங்காவுக்கு அடிக்கல்: சாதனை படைத்த தமிழ்நாடு அரசு




சென்னை: நவ.6–

ரூ.32 கோடி செலவில், 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்காவினை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில், ரூ.37 கோடி மதிப்பீட்டில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டினார். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்காவினை திறந்து வைத்தார்.

மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள டைடல் பூங்காக்கள் மற்றும் மினி டைடல் பூங்காக்கள் 2000ஆம் ஆண்டில் கலைஞர் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை, தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது. 'அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி' என்ற தமிழ்நாடு அரசின் முக்கிய கொள்கையின் படி, தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 லட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 லட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ முதலமைச்சரால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன. மேலும், 5.57 லட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, முதலமைச்சரால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஒசூரில் ரூ.400 கோடி செலவில் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இவை மட்டுமின்றி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்து,

விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டப்பட்டு, அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்ற, விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும், திருப்பூர் மினி டைடல் பூங்கா 11.08.2025 அன்றும் முதலமைச்சரால் திறந்துவைக்கப்பட்டன. மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 01.08.2025 அன்று முதலமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டு, அதன் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. காரைக்குடி மினி டைடல் பூங்காவின் கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை விழுப்புரம் மினி டைடல் பூங்கா, சேலம் மினி டைடல் பூங்கா, தூத்துக்குடி மினி டைடல் பூங்கா, திருப்பூர் மினி டைடல் பூங்கா, தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா மற்றும் பட்டாபிராம் டைடல் பூங்கா ஆகியவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வேலூர் மினி டைடல் பூங்கா திறந்து வைத்தல் மற்றும் நாமக்கல் மினி டைடல் பூங்கா அடிக்கல் நாட்டுதல் முதலமைச்சரால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்கா 32 கோடி ரூபாய் செலவில், தரை மற்றும் நான்கு தளங்களுடன், 60,000 சதுர அடி கட்டுமான பரப்பளவில், 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், முதலமைச்சரால் இன்று அடிக்கல் நாட்டப்பட்ட நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் மினி டைடல் பூங்கா 63,200 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் சுமார் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியின்போது, வேலூர் மினி டைடல் பூங்காவினை முழுமையாக குத்தகைக்கு எடுத்துள்ள M/s. AGS Health care நிறுவனத்திற்கு தள ஒதுக்கீட்டு ஆணையை முதலமைச்சர் வழங்கினார்.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் வேலூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் வசித்துவரும் படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலைவாய்ப்புகள் ஏற்படுவதுடன் அப்பகுதிகள் சமூக பொருளாதார வளர்ச்சி பெறவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், இ.ஆ.ப., டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## உ.பி.யில் தண்டவாளத்தை கடக்கும்போது ரயில் மோதி 6 பெண்கள் பலி

சுனார்: நவ. 6–

சுனார் ரயில் நிலையத்தில் நேற்று காலையில் சோபன் பிரயாக்ராஜ் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணிகள் வந்தடைந்தனர். ரயில் 4வது நடைமேடையில் நின்றதும், அந்த ரயிலிலிருந்து இறங்கிய சில பயணிகள் குறுக்கு வழியில் தண்டவாளத்தை கடந்து செல்ல முயன்றனர். அப்போது, மூன்றாவது பிளாட்பார்ம் வழியாகச் செல்லும் கல்கா மெயில் ரயில் அவர்களின் மீது மோதியது. இதில் பெண் பயணிகள் 6 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்த பயணிகளின் அடையாளங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த சம்பவத்தை தொடர்ந்து முதல்வர் யோகி ஆதித்யநாத், இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்தார். மூத்த அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்வதை உறுதி செய்யுமாறு உத்தரவிட்டார். மேலும் காயமடைந்தவர்களுக்கு உடனடி மருத்துவ சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்.

## நீதிகதிர் எக்ஸ்பிரஸ் நாளிதழை பாண்டிச்சேரி முதல்வரிடம் வழங்கி வாழ்த்து பெற்ற ஆசிரியர் மற்றும் நிர்வாகத்தினர்.



புதுச்சேரி: நவ.6–

புதுச்சேரி மாநில முதலமைச்சர் . ந. ரங்கசாமி அவர்களை, நீதிகதிர் எக்ஸ்பிரஸ் தினசரி காலை நாளிதழ் குழுமத்தினர் புதன்கிழமை 05.11.2025 மரியாதை நிமித்தமாக முதலமைச்சரின் இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்தச் சந்திப்பின்போது, நீதிகதிர் எக்ஸ்பிரஸ் நாளிதழின் பிரதியை முதலமைச்சரிடம் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் கா.சபியுல்லா வழங்கினர். சந்திப்பில் இந்த முக்கியச் சந்திப்பினை, புதுச்சேரி மாநில செய்தியாளர் மணிகண்டன் தலைமையேற்று நடத்தினார். சந்திப்பில் உடனிருந்தவர்கள்: நீதிகதிர் எக்ஸ்பிரஸ் செய்தி ஆசிரியர் ஆஷிக் முஸ்தபா இணை ஆசிரியர் தமிழ்மாறன்,

விழுப்புரம் மாவட்ட நிருபர் ராஜா (ராஜசேகர்) ஆகியோர் முதலமைச்சருடன் கனிவான உரையாடலில் ஈடுபட்டனர்.

முதலமைச்சர் ந. ரங்கசாமி அவர்கள், நீதிகதிர் எக்ஸ்பிரஸ் நாளிதழின் குழுவினரை அன்புடன் வரவேற்றதுடன், சமூகத்திற்குப் பயனுள்ள செய்திகளைத் தொடர்ந்து வெளியிடுவதற்குத் தனது வாழ்த்துகளையும் ஊக்கத்தையும் தெரிவித்தார்.

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருச்சி. நவ.6–

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் (04.11.2025) தொடங்கி நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியினை (ளுஐசு) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்து பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 01.01.2026ஐத் தகுதி ஏற்பு நாளாகக் கொண்டு தகுதியுள்ள நபர்கள் எவரும் வாக்காளர் பட்டியலில் விடுபடவில்லை என்பதையும், தகுதியற்ற நபர்கள் யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதையும் உறுதிசெய்யும் பொருட்டு தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் 04.11.2025 அன்று முதல் மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த களப்பணியில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 138 மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் 324 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 139 ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் 339 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 140 திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்ற தொகுதியில் 270 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 141 திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 253 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 142 திருவெறும்பு+ர் சட்டமன்ற தொகுதியில் 294 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 143 இலால்குடி சட்டமன்ற தொகுதியில் 251 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 144 மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதியில் 273 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 145 முசிறி சட்டமன்ற தொகுதியில் 260 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 146 துறையு+ர் (தனி) சட்டமன்ற தொகுதியில் 279 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் என மொத்தம் 9 சட்டமன்ற தொகுதிகளிலும் நியமனம் செய்யப்பட்டுள்ள 2543 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு பணியினை இன்று (04.11.2025) தொடங்கி மேற்கொண்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் 138 மணப்பாறை, 139 ஸ்ரீரங்கம், 140 திருச்சிராப்பள்ளி மேற்கு 142 திருவெறும்பூர், 143 இலால்குடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே. சரவணன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்து பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார்.

மேலும், இன்று முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த களப்பணிக்காக வாக்காளர்களின் வீடுகளுக்கு வருகை தரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர்கள் தங்களது முழுமையான ஒத்துழைப்பினை நல்கிடுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், கேட்டுக்கொண்டுள்ளார்.

# மத்திய அரசு கட்டுமான துறைக்கான 18 சதவீத ஜிஎஸ்டியை குறைக்காமல் தனிப்பட்ட கட்டுமான பொருட்களுக்கான ஜிஎஸ்டியை குறைத்தது மக்களுக்கு பயன் அளிக்காது.

## கட்டுமான பொறியாளர் சங்க மாநில செயலாளர் மணப்பாறையில் பேட்டி.




திருச்சி. நவ. 6–

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் கட்டுமான பொறியாளர் சங்கத்தின் புதிய பொறுப்பாளர்கள் பணியேற்பு விழா தனியார் திருமண மஹாலில் நடைபெற்றது. இதில் அச்சங்கத்தின் மாநில செயலாளர் துரைக்கண்ணன் கலந்து கொண்டு புதிய பொறுப்பாளர்களுக்கு பதவியேற்பு செய்து வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

எம் சாண்ட், பி சாண்ட் விலை மிக அதிகமாக உள்ளது. நான்கு ஆண்டுகளில் இரு மடங்கு விலை ஏறியுள்ளது அதனை குறைக்கவேண்டும் என தமிழக அரசை கூட்டமைப்பு சார்பில் கேட்டுக்கொள்கிறோம். அதேபோல் கட்டுமான துறை சார்ந்த சிறுசிறு பொருட்களின் விலையும் ஏற்றமடைந்து வருவதால் அதற்கு ஒரு தனி ஆணையம் அமைத்து விலை உயர்வை கட்டுக்குள் கொண்டு வரவேண்டும். கர்நாடகா, குஜராத்தில் கட்டட பொறியாளர் களுக்கு என தனியாக கவுன்சில் உள்ளது. தமிழகத்தில் வழக்கறிஞர்கள், மருத்துவர்களுக்கு கவுன்சில் இருப்பதுபோல் கட்டட பொறியாளர் களுக்கும் கவுன்சில் அமைத்துத் தர வேண்டும் மாநில அரசு கேட்டுக் கொள்கிறோம். சிமெண்ட் உள்ளிட்ட சில பொருட்களுக்கான ஜிஎஸ்டியை மத்திய அரசு தற்போது குறைத்துள்ளது. ஆனால் நாம் ஒரு கட்டுமானத்தை கட்டி விற்கும் போது அதற்கான ஜிஎஸ்டி யை குறைக்கவில்லை. இதனால் மற்ற பொருட்களுக்கான ஜிஎஸ்டி குறைப்பின் பயன் மக்களுக்கு சென்று சேர முடியாது என்ற நிலை உள்ளது. கட்டுமானத்தின் ஜிஎஸ்டியை குறைத்தால் தான் மக்கள் பயனடைவர். ஆகவே மத்திய அரசு கட்டுமானத் துறைக்கான ஜிஎஸ்டியை குறைத்து மக்களுக்கு நன்மை ஏற்படுத்த வேண்டும். ஆகவே கட்டுமான துறைக்கான 18 சதவீத ஜிஎஸ்டியை குறைக்க வேண்டும். தனிப்பட்ட கட்டுமான பொருட்களுக்கான ஜிஎஸ்டியை குறைத்தது போல் கட்டுமான துறைக்கான ஜிஎஸ்டியையும் மத்திய அரசு குறைக்க வேண்டும் என்றார்.

விழாவில் கட்டுமானப் பொறியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# பாண்டிச்சேரி மாநில தலைமைச் செயலகத்தில் அரியாங்குப்பம் சட்டமன்ற உறுப்பினர்



பாஸ்கர் (எ) தட்சினாமூர்த்தி அவர்களிடம் நீதி கதிர் எக்ஸ்பிரஸ் காலை நாளிதழ் செய்தித்தாளை நாளிதழின் வெளியிட்டாளரும் ஆசிரியருமான கா. சபியுல்லா வழங்கினார் உடன் பாண்டிச்சேரி மாநில தலைமை செய்தியாளர் மணிகண்டன், செய்தி ஆசிரியர் எம். சி .ஆசிக் முஸ்தபா, இணை ஆசிரியர் தமிழ்மாறன்,விழுப்புரம் மாவட்ட செய்தியாளர் ராஜா (எ) ராஜசேகர் உள்ளிட்டோ கலந்து கொண்டனர்.

செய்தித்தாளைப் பெற்றுக் கொண்ட சட்டமன்ற உறுப்பினர் பாண்டிச்சேரியில் நீதிகதிர் காலை நாளிதழ் சிறப்புடன் வளம் பெற வாழ்த்து தெரிவித்தார்,



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் முனைவர்பொன்முடி,அவர்களுக்கு மீண்டும்துணை பொதுச் செயலாளராக தேர்வு செய்ததற்கு நன்றி தெரிவித்துசெஞ்சி நான்கு முனை சந்திப்பில் இனிப்புகள் வழங்கி பட்டாசு வெடித்தும் கொண்டாடப்பட்டது .இந்நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் முன்னாள் மாவட்ட இளைஞரணி செயலாளர் முனைவர். கே.வி.சிட்டிபாபு,வல்லம் ஒன்றிய துணை செயலாளர் ஏ.பி ராஜலிங்கம், முன்னாள் மாவட்ட பிரதிநிதி துரை.தாமோதரன்,இல்லோடு ஸ்டாலின், பென் நகர் அசோகன்,பெரும் பூண்டி சிவா,பெருங்காப்பூர் செல்வராஜ்,தையூர்நெடுஞ்செழியன்,ஜம்போதி முனுசாமி,செஞ்சி கோவிந்தசாமி,கல்லடி குப்பம் தாஸ், தென்புத்தூர் வெங்கடேசன், மேல் சேவூர் கிருஷ்ணமூர்த்தி,மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் அடையாள அட்டை SIR படிவம் வழங்கல் ஆய்வு



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி டவுன் மற்றும் அம்மையப்பட்டு, கீழ் சாத்தமங்கலம் கிராமங்களில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் டி.செல்வம் பொதுமக்களுக்கு தேர்தல் பணிக்கான வாக்காளர் அடையாள அட்டைக்கு தனித்தனி நபர்களுக்கான ஷிமிஸி படிவம் வழங்குவதை பார்வையிட்டார். இதில் வந்தவாசி வட்டாட்சியர் எஸ்.சம்பத் குமார், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் உதயகுமார், தேர்தல் துணை வட்டாட்சியர் மாரிமுத்து, வருவாய் ஆய்வாளர் லோகோஷ், விஏஓ அர்ஜுனன், வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், நகராட்சி ஊழியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# செஞ்சி பீரங்கி மேடு அருணாச்சலேஸ்வரர் கோவிலில் அன்னாபிஷேகம்



செஞ்சி நவ 06

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பீரங்கி மேடு பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு அபிதகுஜலாம் பாள் சமேத அருணாச் சலேஸ்வரர் கோவிலில் ஐப்பசி மாத அஸ்வினி நட்சத்திரத்தை முன்னிட்டு அன்னா பிஷேகம் நடைபெற்றது.

இதனை முன்னிட்டு அதிகாலை பால், தயிர், இளநீர் சந்தனம் ,வாசனை திரவியங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களால் அபிஷேகம் நடைபெற்று ஆராதனை காண்பிக் கப்பட்டது. தொடர்ந்து மாலை 6 மணிக்கு அன்னாபிஷேகம் தொடங்கியது .

இதில் 50கிலோ அரிசி சாதம் செய்து அருணாச்சலேஸ்வரர்க்கு அன்னம் , மற்றும் பல்வேறு காய்கறிகளால் அலங்கரிக்கப்பட்டு தீபாரதனை காண்பிக்கப்பட்டது .

இதில் பெண் பக்தர்கள் காய்கறியில் முயல், பறவைகள் பூங்கொத்து போன்ற பல்வேறு வடிவங்கள் செய்து அசத்தினர்.

அதனைதொடர்ந்து இரவு 8 மணிக்கு அன்னாபிஷேகம் கலைக்கப்பட்டது. அன்னத்தால் வடிவமைக்கப்பட்ட லிங்கம் மற்றும் பூஜையில் வைக்கப்பட்ட கலசம் மேளதாளம் முழங்க கோவில் உட்பிரகாரம் வலம் வந்து கோவில் ஈசானிய மூலையில் உள்ள கிணற்றில் கரைத்தனர். தொடர்ந்து கலசத்தை எடுத்து வந்து அருணாச்சலேஸ்வரருக்கு அபிஷேகம் நடைபெற்றது .

தொடர்ந்து அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது . இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அன்னாபிஷேகம் செய்த சாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாட்டினை கோவில் நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தனர்.

# திருவள்ளூர் அருகே சரித்திர பதிவேடு குற்றவாளி கொலை : மணவாள நகர் போலீசார் விசாரணை

திருவள்ளூர் நவ 06 :

திருவள்ளூர் அடுத்த மணவாள நகர் கபிலர் நகரை சேர்ந்தவர் நவீன் என்கிற குள்ள சீனு (24). சரித்திர பதிவேடு குற்றவாளியான இவர் மீது கஞ்சா விற்பனை, கொலை வழக்கு போன்ற பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் எம்ஜிஆர் நகர் ஏரிக்கரை ஓரத்தில் இளைஞர் ஒருவர் தலையில் கல்லை போட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் மணவாளநகர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து விரைந்து வந்த மணவாளநகர் போலீசார் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப்பட்டன. இது குறித்து வழக்குப் பதிவு செய்து மேற்கொண்ட விசாரணையில் கொலை செய்யப்பட்டு கிடந்தது மணவாளநகர் கபிலர் நகர் பகுதியைச் சேர்ந்த நவீன் (எ) குள்ள சீனு (24) என்பது தெரியவந்தது. சரித்திர பதிவேடு குற்றவாளியான இவன் மீது கஞ்சா விற்பனை, கொலை வழக்கு போன்ற பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரியவந்தது.

ஏற்கனவே நவீன்(எ) குள்ள சீனு மீது பல்வேறு வழக்கில் தொடர்பு இருப்பதால் இந்த கொலையில் ஈடுபட்டது யார் என்பது குறத்து மணவாளநகர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். திமுக ஆட்சியில் நாள்தோறும் கொலைச் சம்பவங்கள் சர்வசாதாரணமாக அரங்கேறுவதாக பொது மக்கள் சார்பாக குற்றம் சாட்டுகின்றனர்.இந்த சம்பவம் மணவாளநகர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கவின் ஆணவக் கொலை வழக்கில் கைதான ஜெயபாலன் ஜாமின் மனு நவ.10ம் தேதிக்கு ஒத்திவைப்பு

நெல்லை: நவ. 6–

கவின் ஆணவக் கொலை வழக்கில் கைதான ஜெயபாலன் ஜாமின் மனு நவ.10ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. காதல் விவகாரத்தில் கவின் ஆணவக் கொலை செய்யப்பட்ட வழக்கில் சுர்ஜித், சரவணன், ஜெயபாலன் கைது செய்யப்பட்டனர். 2வது முறையாக ஜெயபாலன் தாக்கல் செய்த ஜாமின் மனு விசாரணையை நெல்லை மாவட்ட நீதிமன்றம் ஒத்திவைத்தது. ஏற்கெனவே ஜெயபாலனின் ஜாமின் மனுவை நெல்லை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

# சேலத்தில் 2 பெண்கள் கொலை. கல்குவாரி குட்டையில் சடலமாக மீட்பு.



சேலம். நவ.6–

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை அருகே 2 மூதாட்டிகள் மர்மமான முறையில் கொல்லப்பட்டு,கல்குவாரி தண்ணீர் குட்டையில் பிணமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தூதனூர் பகுதியைச் சேர்ந்த பாவாயி (70) விவசாய கூலி தொழிலாளி; அதே பகுதிகளைச் சேர்ந்த பெரியம்மாள் (75) ஆடுகள் வளர்த்து வாழ்ந்து வந்தவர். இ இருவரும் நேற்று காலை வீடுகளை விட்டு வெளியேறிய பின்னர் இரவு வரை வீடு திரும்பவில்லை. உறவினர்கள் பல இடங்களில் தேடி பார்த்தும் காணவில்லை. குடும்பத்தினரின் புகாரின் பேரில் மகுடஞ்சாவடி போலீசார் விசாரணை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், தூதனூர் பகுதியில் அம்மாசி என்பவருக்கு சொந்தமான பழைய கல்குவாரியில் உள்ள தண்ணீர் குட்டையில் இருவரின் உடல்கள் மிதந்து கிடப்பதை உள்ளூர் மக்கள் பார்த்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார், தீயணைப்பு துறையினர் உதவியுடன் உடல்களை மீட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர்.

மூதாட்டிகள் அணிந்திருந்த நகைகள் காணாமல் போனதால்,நகைக்காகவே கொலை செய்யப்பட்டிருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர். இதை நடத்திய மர்ம நபர்கள் கொலை செய்து உடலை தண்ணீர் குட்டையில் வீசியிருக்க வாய்ப்பு அதிகம் என ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

குற்றம் நடந்த பகுதிக்கு போலீசார் சென்று தடயங்களை சேகரித்து வருகின்றனர். கொலைக்கு காரணமானவர்கள் யார், அவர்கள் எந்த வழியில் தப்பினர் என்ற கோணத்தில் சிசிடிவி ஆதாரங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன.

இந்த இரட்டை கொலை சம்பவம் தூதனூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவாக்கவுண்டனூர் புத்தர் பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்திற்கான கணக்கீட்டு வடிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

## சேலம் அரசு மருத்துவக்கல்லூரியில் நடப்பு கல்வி ஆண்டுக்கான மருத்துவம் சார்ந்த ஓராண்டு சான்றிதழ் படிப்புகளுக்கான நேரடி மாணவர் சேர்க்கைக்கு 14ந்தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தகவல்

சேலம். நவ.6–

சேலம் அரசு மருத்துவக்கல்லூரியில் நடப்பு கல்வி ஆண்டுக்கான மருத்துவம் சார்ந்த ஓராண்டு சான்றிதழ் படிப்புகளுக்கான நேரடி மாணவர் சேர்க்கைக்கு 14.11.2025 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளதாவது:

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பாடப்பிரிவுகளில் நேரடி மாணவர்கள் சேர்க்கை நடைபெற உள்ளது. நடப்பு கல்வி ஆண்டுக்கான சேலம் அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் சார்ந்த ஓராண்டு சான்றிதழ் படிப்புகளுக்கான ECG / Tread Mill Technician, Respiratory Therapy Technician, Dialysis Technician, Theatre Technician, Orthopaedic Technician (Male), Multi Purpose Hospital Worker ஆகிய ஆறு பிரிவுகளுக்கான நேரடி மாணவர் சேர்க்கைக்கு 14.11.2025 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரியில் மொத்தமாக 81 இடங்கள் காலியாக உள்ளன. மேல்நிலைப்பள்ளி (12 ஆம் வகுப்பு) கல்வியில் அறிவியல் அல்லது உயிரியல் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி பெற்று 17 வயது நிறைவுற்றவர்கள் இந்த நேரடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ளலாம். விருப்பமும் தகுதியும் உள்ள மாணவர்கள் தங்களது மேல்நிலைப்பள்ளி மதிப்பெண் சான்றிதழ், மாற்று சான்றிதழ், ஜாதி சான்றிதழ், ஆதார் அட்டை ஆகியவற்றுடன் 14.11.2025 அலுவலக பணி நாட்களில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மகளிர் திட்ட அலுவலகம் மற்றும் அனைத்து வட்டாரங்களில் செயல்பட்டு வரும் வட்டார இயக்கம் மேலாண்மை அலகு மகளிர் திட்ட அலகுகளை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

மேலும், இதுகுறித்த விவரங்களுக்கு 0427 2411552, 94861 59320 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி லெமன் டிரி ஹோட்டலில் கைத்தறி ரகங்களில் புது வடிவமைப்பினை புகுத்தி அவறறை பன்முகப்படுத்தி ஏற்றுமதி செய்யக்கூடியரகங்களாக மாற்றுதல் தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில பவானி பகுதியை சேர்ந்த சக்திவேல் லண்டனில் நடந்த ஆடை அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு ஜமுக்காளத்தை கொண்டு ஆடை அணிகலங்கள் கைப்பைகள அறிமுகப்படுத்தியதை பாராட்டி பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் வாக்குச்சாவடி மையத்தின் அடிப்படை வசதிகள் தொடர்பான பணிகள் : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் ஆய்வு

திருவள்ளூர் நவ 06 :

திருவள்ளூர் மாவட்டத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டுமான பணிகளையும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் வாக்குச்சாவடி மையத்தின் அடிப்படை வசதிகள் தொடர்பான பணிகளையும் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் இடம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 விண்ணப்பப் படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலர் வழங்கினார்.

அதனை தொடர்ந்து திருவள்ளூர் வட்டம், காக்களூர் ஊராட்சி மற்றும் ஆவடி வட்டம், திருநின்றவூர் பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 விண்ணப்பப் படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, காக்களூர் அரசினர் தொடக்கப் பள்ளியிலும் பொன்னேரி வட்டம், ஊராட்சி ஒன்றிய அரசினர் நடுநிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்திலும், திருநின்றவூர் நகராட்சி, ஊராட்சி ஒன்றிய அரசினர் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்திலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், திருவள்ளூர் வட்டம், செவ்வாய்பேட்டையில் நெடுஞ் சாலைகள் துறை சார்பில் ரூ.8.1 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 15 கட்டுமானப் பணிகளையும், வேப்பம்பட்டில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 14 கட்டுமானப் பணிகளையும், ரூ.56 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 13 கட்டுமானப் பணிகளையும், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், நந்தியம்பாக்கம் ஊராட்சியில் ரூ.44.5 கோடி மதிப்பீட்டில் அத்திப்பட்டு நந்தியம்பாக்கம் இடையே கட்டடப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளையும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்கு நரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஸ்ரீராம், உதவி வாக்குப்பதிவு அலுவலரும் திருவள்ளூர் வட்டாட்சியரு மான பாலாஜி, நெடுஞ்சாலைகள் துறை உதவி செயற் பொறியாளர் மணிவண்ணன், உதவி பொறியாளர் கார்த்திகேயன், உதவி வாக்குப்பதிவு அலுவலரும் பொன்னேரி வட்டாட்சியரு மான சோமசுந்தரம், திருநின்றவூர் நகர்மன்ற தலைவர் உஷாராணி ரவி, வாக்குப்பதிவு அலுவலரும் ஆவடி மாநகராட்சி துணை ஆணையருமான மாரிசெல்வி, உதவி வாக்குப்பதிவு அலுவலரும் உதவி வாக்குப்பதிவு திருநின்றவூர் நகராட்சி ஆணையருமான ஜீவிதா, அலுவலரும் ஆவடி வட்டாட்சியருமான கண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் கருணை அடிப்படையிலான அரசு பணிக்கு இனி ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பம் செய்ய வேண்டும்: தமிழ்நாடு அரசு அரசாணை

சென்னை: நவ.6–

தமிழ்நாட்டில் கருணை அடிப்படையிலான அரசு பணிக்கு இனி ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பம் செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணையில்,

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையிலான பணி நியமனம்) விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, இனிமேல் கருணை அடிப்படையிலான அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்க, 'ஆன்லைன்' (Online) வழிமுறை மட்டுமே பின்பற்றப்பட வேண்டும்.

அரசு பணியின்போது உயிரிழக்கும், அரசுப் பணியாளர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் கருணைப் பணி கோரி விண்ணப்பிப்பதற்காக, தலைமைச் செயலாளர் முருகானந்தம் புதிய அரசாணையை வெளியிட்டுள்ளார். இத்தகைய அரசாணையின்படி, விண்ணப்பதாரர்கள் பயன்படுத்திப் பதிவு செய்ய வேண்டிய புதிய வலைதள முகவரி (www.tncgpa.tn.gov.in) செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இந்த புதிய வலைதளம் கடந்த அக்டோபர் 31ம் தேதியில் இருந்து செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இனிமேல், கருணை அடிப்படையிலான அரசுப் பணி நியமனம் கோருபவர்கள் இந்த புதிய வலைதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அரசாணையில் குறிப்பிடப்பட்டது.



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காமலாபுரம் பகுதியைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கணக்கெடுப்பு படிவத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் வீடுதோறும் சென்று வழங்கினார். அருகில் உதவி ஆட்சியர் மரு. வினோதினி பார்த்திபன், நிலக்கோட்டை வாக்காளர் பதிவு அலுவலர் சுகுமார், நிலக்கோட்டை வட்டாட்சியர் ஜெயபிரகாஷ் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

## திருமூர்த்தி மலையில் உள்ள பஞ்சலிங்க அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி!

திருப்பூர்: திருமூர்த்தி மலையில் உள்ள பஞ்சலிங்க அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருமூர்த்தி மலையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பஞ்சலிங்க அருவிக்கு செல்லும் இரும்பு பாலம் சேதமடைந்தது. பஞ்சலிங்க அருவிக்கு செல்லும் இரும்பு பாலம் சரிசெய்யப்பட்ட நிலையில் 12 நாட்களுக்கு பிறகு குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## பரமத்திவேலூர் அருகே ஆம்னி பேருந்து கவிழ்ந்து விபத்து: ஒருவர் உயிரிழப்பு, காயமடைந்த 6 பேருக்கு சிகிச்சை!

நாமக்கல்: நவ. 6–

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அருகே சென்று கொண்டிருந்த ஆம்னி பேருந்து கவிழ்ந்து விபத்திற்கு உள்ளாகி இருக்கிறது. பெங்களூரில் இருந்து கொடைக்கானலுக்கு சென்ற பேருந்து சேலம், கரூர் தேசிய நெடுஞ்சாலை வழியாக வந்துள்ளது. அதிகாலை 3மணி அளவில் பரமத்தி அடுத்து ராசாம்பாளையம் டோல் கேட்டை கடந்து சென்று இருக்கிறது. அதில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய கிராமுடு அருகே மேம்பாலம் பணிகள் நடைபெற்று வருவதால் பேருந்துகள் அணுகு சாலையில் திருப்பிவிடப்பட்டது

அந்த இடத்தில் ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து பக்கத்தில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துகள் உள்ளானது. இந்த பேருந்து 14 பயணிகள் உட்பட 18 பேர் வந்தனர். இந்த விபத்தில் காயமடைந்த 7 பேரும் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் மட்டும் உயிரிழந்துள்ளார். மிதமுள்ள 6 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிதம்பர விடுதியில் போதை இல்லா தமிழ்நாடு விழிப்புணர்வு பேரணி

அறந்தாங்கி நவம்பர் 6

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகில் சிதம்பரவிடுதி அரசு மேல்நிலைப்பள்ளியில் நமது சமுதாயத்தில் உள்ள பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் நலனில் தீங்கு விளைவிக்கும் போதை பொருளை பயன்படுத்தாமல் தடுப்பதற்கான போதையில்லா தமிழ்நாடு விழிப்புணர்வு பேரணி தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு காவல்துறை, தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு, ராணியம்மாள் கல்வி அறக்கட்டளை, நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போதை இல்லா தமிழ்நாடு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது, பேரணியை அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் இ.அபிநயா கொடியசைத்து தொடங்கி வைத்தார். பேரணியைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் சிதம்பரவிடுதி பள்ளி வளாகத்தில் பனை விதைகளை விதைத்து தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரங்களை அதிகரிக்க வேண்டும் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.



தலைமை ஆசிரியர் பி. ஜெயலலிதா மற்றும் முதுகலை வரலாறு ஆசிரியர் எஸ்.கண்ணன் அனைவரையும் வரவேற்றனர்.

இந்நிகழ்வில் கோட்டாட்சியர் போதை சம்பந்தமான புகார் அளிப்பதற்கான 10581 என்ற எண்ணை அறிமுகம் செய்து வைத்து,போதைப் பொருளால் மாணவர்கள் சிக்கிக் கொள்ளாமல் படிப்பில் கவனம் செலுத்தி டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் சொன்னவற்றை அனைத்தையும் மாணவர்கள் பின்பற்றி வாழ்வில் வெற்றியடைய வேண்டும். போதைப் பொருளுக்கு மாணவர்கள் நோ சொல்ல வேண்டும் கல்விக்கு எஸ் சொல்ல வேண்டும். ஆறு கோடி பனை விதை தமிழகம் முழுவதும் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இன்றைய நிகழ்வில் இந்த பள்ளியில் பனை விதைகள் நடவு செய்த அனைத்து மாணவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என மாணவர்கள் மத்தியில் சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பித்தார்.

தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு ஒருங்கிணைப்பாளர் பொறியாளர் சர்வம் சரவணன் போதைப் பொருளை தடுப்பதற்கான உறுதி மொழியை வாசித்தார். பின்னர் பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடக்கூடாது, போதை பொருளை பயன்படுத்தாமல் தடுப்பதற்கான விழிப்புணர்வை உண்டாக்கிக் கொள்ள வேண்டும், போதைப் பொருளால் ஏற்படும் தீய விளைவுகளையும் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்வில் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் துணை தலைமை ஆசிரியர் அசோக்குமார், உடற்கல்வி ஆசிரியர் கோதை ஆண்டாள், பட்டதாரி ஆசிரியர் சாந்தி, முதுகலை ஆசிரியர் சுதா, கார்த்திகா, ரம்யா, மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பள்ளியின் முதுகலை வரலாறு ஆசிரியர் எஸ்.கண்ணன் நன்றி கூறினார்.

## நண்பரின் பிறந்த நாளை பட்டா கத்தியில் கேக் வெட்டி கொண்டாட்டம் இன்ஸ்டாகிராமில் வீடியோ பதிவிட்ட 3 பேர் கைது

திருவள்ளூர் நவ 06 :

திருவள்ளூர் அருகே நண்பர் ஒருவரின் பிறந்தநாள் விழாவை பட்டா கத்தியில் கேக் வெட்டி, கையெறி பட்டாசுகளை கொளுத்தி எரிந்து இன்ஸ்டாகிராமில் வீடியோ பதிவிட்டதாக 3 பேரை மணவாளநகர் போலீசார் கைது செய்தனர். திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம், கொப்பூர் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ஒளி (23) என்ற இளைஞருக்கு கடந்த 1ஆம் தேதி பிறந்தநாள். இதனையடுத்து இவரது நண்பர்களான அதே பகுதியைச் சேர்ந்த அருள் (எ) அருண்குமார் (23), கனிஷ்கர் (20), மற்றும் 17 வயதுடைய 2 நண்பர்கள் என மொத்தம் 5 பேர் ஒன்றாக இணைந்து பிறந்த நாள் கொண்டாடியுள்ளனர்.



இதில் பட்டா கத்தியில் பிறந்தநாள் கேக் வெட்டியும், கையெறி பட்டாசுகளை கொளுத்தி வீட்டின் காம்பவுண்ட் சுவர்கள் மீது எறிவது போன்ற வீடியோ ஒன்றை இன்ஸ்டாகிராம் வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளனர்.இந்த வீடியோ பெரும் வைரலாக பரவியது. இதனையடுத்து மாவட்ட எஸ்பி விவேகானந்தா சுக்லா உத்தரவின் பேரில் திருவள்ளூர் டிஎஸ்பி தமிழரசி மேற்பார்வையில் மணவாளநகர் போலிஸ் இன்ஸ்பெக்டர் பாரூக் தலைமையில் போலீசார் வழக்குப் பதிவு செய்து நேற்று முன்தினம் 5 பேரை பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

இதில் சிறுவர்கள் 2 பேரையும் அவரது பெற்றோர்களை வரவழைத்து எச்சரித்து காவல் நிலைய ஜாமீனில் விடுவித்தனர். இதுகுறித்து வழக்கு பதிவு செய்த மணவாளநகர் போலீசார் தமிழ்ஒளி, அருண்குமார், கனிஷ்கர் ஆகிய 3 பேரையும் கைது செய்து திருவள்ளூர் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தி புழல் மத்திய சிறையில் அடைத்தனர்.

# 2026ல் விஜய் முதல்வராக சபதம் ஏற்போம்- தவெக சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் புஸ்ஸி ஆனந்த் பேச்சு




மாமல்லபுரம்: நவ.6–

2026ல் விஜய் முதல்வராக சபதம் ஏற்போம் என்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தவெகவினருக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் விஜய் தலைமையில் சென்னை அருகே மாமல்லபுரத்தில் இன்று காலை கூடியது. இக்கூட்டத்தில் கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்காக இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப் பட்டது.

இதையடுத்து கட்சியின் உறுதிமொழி வாசிக்கப்பட்டது. அதில், “நமது நாட்டின் விடுதலைக்காகவும் நமது மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் மண்ணில் இருந்து தீரத்துடன் போராடி உயிர் நீத்த எண்ணற்ற வீரர்களின் தியாகத்தை எப்போதும் போற்றுவேன். நமது அண்ணை தமிழ் மொழியைக் காக்க உயிர் தியாகம் செய்த மொழிப்போர் தியாகிகளின் இலக்கை நிறைவேற்றும் வகையில் தொடர்ந்து பாடுபடுவேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும் இறையாண்மை மீதும் நம்பிக்கை வைத்து அனைவருடன் ஒற்றுமை, சகோதரத்துவம், மத நல்லணிக்கம், சமத்துவம் ஆகியவற்றை பேணக்காக்கின்றன பொறுப்புள்ள தனி மனிதனாக செயல்படுவேன்.

மக்களாட்சி, மதச்சார்பின்மை, சமூக நீதி பாதையில் பயணித்து என்றும் மக்கள் நலச் சேவகராக கடமையாற்றுவேன் என்று உறுதி அளிக்கிறேன். சாதி, மதம், பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் பெயரில் உள்ள வேற்றுமைகளைக் களைந்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அனைவருக்கும் சம வாய்ப்பு, சம உரிமை கிடைக்க பாடுபடுவேன். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவக் கொள்கையை கடைப்பிடிப்பேன் என்று உளமாற உறுதிகூறுகிறேன்” என்ற உறுதிமொழியை கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் விஜயலட்சுமி வாசிக்க, அனைவரும் எழுந்து நின்று ஏற்றனர்.

இதையடுத்து, தவெகவின் கொள்கைத் தலைவர்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் வரவேற்புரை ஆற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த், “எண்ணற்ற சோதனைகளைத் தாண்டி வந்துள்ளோம், இன்று அரசியலின் மையப்புள்ளி விஜய்தான். தவெக தொடங்கி 2 வருடம் 9 மாதம் நிறைவடைந்துள்ளது. ஆனால், நம் தலைவரின் உழைப்பு, அர்ப்பணிப்பு 30 ஆண்டுகளைத் தாண்டியது. இவை அனைத்துக்கும் அடித்தளம் ஒரு தனி நபர்தான்.

நம்முடைய எதிரிகள் ஒன்றைப் புரிந்து கொள்ளவில்லை. இவரை(விஜய்) யாரும் எளிதில் அசைத்துப் பார்க்க முடியாது. ஏனெனில் இவர் தாய்மார்களின் நம்பிக்கை, தமிழ் மண்ணின் நம்பிக்கை. நமது கட்சி சாதாரணக் கோட்டை கிடையாது. இது தொண்டர்களின் உழைப்பால் கட்டப்பட்டுள்ள இரும்புக்கோட்டை. இனி நம் வேலை எதிரிகளை தோல் உரித்துக் காட்டுவதுதான். நாம் புதிய வேகத்துடன் செயல்படப் போகிறோம். மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். அந்த மாற்றத்தை ஏற்படுத்தும் தகுதியும் நேர்மையும் கொண்ட ஒரே கட்சி நமது தவெக மட்டும்தான்.

இது வெறும் பொதுக்குழுக் கூட்டம் மட்டுமல்ல. இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க கூட்டம். ஒரு மாபெரும் இயக்கத்துக்கு கட்டுப்பாடு என்பது மிகவும் முக்கியம். நாம் அனைவரும் தலைவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டும். நமது பலமே நமது கட்டுக்கோப்புதான். அதை சீர்குலைக்க நினைக்கும் எதிரிகளை நாம் அனுமதிக்கக் கூடாது. பெரியவர்களை மதித்தும் இளைஞர்களை அரவணைத்தும் நாம் பயணிக்கப் போகிறோம். இனி ஒரு நொடி கூட நமக்கு ஓய்வு இல்லை. நாம் ஒவ்வொருவரும் கிராமம்தோறும் வீதிதோறும் செல்ல வேண்டும்.

ஆளும் அதிகாரத்தில் இருப்போரின் அவலங்களை எடுத்துரைக்க வேண்டும். நம் கட்சியின் எதிர்கால திட்டங்கள் குறித்து எடுத்துக்கூற வேண்டம். 2026ல் நம் தலைவர் முதல்வராக அமர்வதற்கு நாம் அனைவரும் சபதம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். அந்த மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக நாம் இருக்கிறோம். அதற்கான தொடக்கம்தான் இந்த சிறப்பு பொதுக்குழுக் கூட்டம்.” என தெரிவித்தார்.

# புதிய மேம்பாலம் அமைக்கும் பணி அமைச்சர் ஆட்சியர் ஆய்வு ..



ஈரோடு நவ.06

ஈரோடு மாவட்டம் பவானி லட்சுமி நகர் பகுதியில், சேலம்கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில், புதிய மேம்பாலம் அமைக்கும் பணிக்காக திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தேசிய நெடுஞ்சாலை எண் 544 இல், 58. 250 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பகுதியில், கோயம்புத்தூரில் இருந்து சேலம் நோக்கி செல்லும் புதிய மேம்பாலம் கட்டும் பணிகளுக்கான ஆய்வு செய்யப்பட்டது. மேலும் சுமார் 45 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு, 700 மீட்டர் தூரம் அளவில் ஆறு வழி சாலையுடன் இணைந்து இந்த மேம்பாலம் அமைய உள்ளது.

இந்த மேம்பாலம் அமைக்கும் பணியை அமைச்சர் சு. முத்துசாமி, ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் வி. சி சந்திரகுமார் மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறை குழு தலைவர் சீனிவாசலூர் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் ஆய்வில் கலந்து கொண்டனர்.

# துவரங்குறிச்சி அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற போது விபத்தில் சம்பவ இடத்தில் தந்தை பலி , மகள் தீவிர சிகிச்சை



திருச்சி, நவ. 6–

திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பழைய பாளையம் மின்னஞ்சல், நாட்டார்பட்டியைச் சேர்ந்த பழனிச்சாமி மகன் கண்ணன் (49) மற்றும் அவரது மகள் தவமணி (16), குடும்பத்துடன் வாசித்து கூலி வேலை செய்து வருவதாகவும் இந்நிலையில் துவரங்குறிச்சி அரசு பெண்கள் மாதிரி பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு படித்து வரும் தனது மகள் தவமணி என்பவரை இன்று துவரங்குறிச்சி பள்ளியில் விட்டுச் செல்வதற்காக தனது TN45 AD 9951 TVS XL பதிவென் கொண்ட இருசக்கர வாகனத்தில் வீட்டில் இருந்து சென்ற நத்தம் to துவரங்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி துவரங்குறிச்சி ஸ்டாலின் நகர் பேருந்து நிறுத்தம் அருகில் வந்து கொண்டிருந்த போது அதே திசையில் இருசக்கர வாகனத்தின் பின்னே வந்த TG05T3618 என்ற பதிவில் கொண்ட தனியார் சுரேஷ் ஆம்புலன்ஸ் வாகனத்தை தெலுங்கானா மாநிலம் நல்குண்டா மாவட்டம், நிடமனூரைச் சேர்ந்த கோட்டேஷ் மகன் தரி கிரண் குமார்என்பவர் அதிவேகமாகவும் ஜாக்கிரதையாகவும் போட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மோதியதில் தூக்கி வீசப்பட்டதில் கண்ணன் என்பவருக்கு தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார். அதே வாகனத்தில் பயணித்த மகன் தவமணி என்பவருக்கு தலையில் பலத்த ரத்த காயமும் உடலில் சிராய்ப்பு காயங்களுடன் ஏற்பட்டு அருகில் இருந்தவர்கள் உதவியுடன் துவரங்குறிச்சி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மருத்துவ ஆலோசனைப்படி மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தகவல் அறிந்து வந்த துவரங்குறிச்சி காவல் உதவி ஆய்வாளர் துளசி மற்றும் போலீசார் குழு உதவியுடன் சம்பவ இடத்தில் இருந்த கண்ணன் என்பவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் மேலும் துவரங்குறிச்சி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



பாண்டிச்சேரி மாநில அமைச்சர் ஜான்குமார் அவர்களை நீதி கதிர் எக்ஸ்பிரஸ் காலை நாளிதழ் குழுமத்தின் சார்பில் நாளிதழின் வெளியிட்டாளரும் ஆசிரியருமான கா. சபியுல்லா அமைச்சர் அலுவலகத்தில் சந்தித்து நாளிதழை வழங்கி வாழ்த்து பெற்றார்.உடன் புதுச்சேரி மாநில தலைமை செய்தியாளர் மணிகண்டன் தலைமையில் செய்தி ஆசிரியர் ஆசிக் முஸ்தபா இணை ஆசிரியர் தமிழ்மாறன் விழுப்புரம் மாவட்ட செய்தியாளர் ராஜா (எ) ராஜசேகர் ஆகியோர் உடன் இருந்தனர்

# தூய்மை பணியாளர்களின் சேவை அளப்பரியது : ஆரணி எம்பி பாராட்டு



வந்தவாசி, நவ 06:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி மிட் பிரைன் மனநல மையம் – மலர் கிளினிகல் லேப் இணைந்து நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு உடல் நலமும் மன நலமும் விழிப்புணர்வு முகாமை நடத்தினர். மைய நிர்வாகி இரா. பாஸ்கரன் வரவேற்றார். லேப் நிர்வாகி மலர் சாதிக் தலைமை தாங்கினார். இதில் தூய்மை பணியாளர்களுக்கு உடல் பரிசோதனைகள் செய்யப்பட்டது. மேலும் ஆரணி எம்பி எம்.எஸ். தரணிவேந்தன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று தூய்மை பணியாளர்களுக்கு கையுறைகள் மற்றும் ரெயின்கோட் உள்ளிட்ட அத்யாவசிய பொருட்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையர் சோனியா, நகர் மன்ற தலைவர் ஜலால், துணைத் தலைவர் அன்னை சீனிவாசன், நகர செயலாளர் தயாளன், ஒன்றிய செயலாளர் சி.ஆர். பெருமாள், முன்னாள் நகர செயலாளர் அன்சாரி, எக்ஸ்னோரா கிளை தலைவர் ரயில்வே தனசேகரன், கலைஞர் முத்தமிழ் சங்க தலைவர் வந்தை குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் ஏராளமான தூய்மை பணியாளர்கள் பங்கேற்கின்றனர்.

# தமிழகத்தில் 218 விஏஓக்கள் நேரடி நியமனத்துக்கு இடைக்கால தடை: உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை: நவ. 6–

தமிழகத்தில் 218 கிராம நிர்வாக அலுவலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப டிஎன்பிஎஸ்சிக்கு இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக கிராம நிர்வாக அலுவலர் சங்க பொதுச்செயலாளர் அருள்ராஜ் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அகமது ஃபயஸ் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், ‘தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் காலியாக உள்ள 218 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்ப செப்.1 முதல் 15ம் தேதி வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க மே மாதம் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாவட்ட அளவில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணியிட மாறுதல் வழங்கிய பிறகு காலியுள்ள கிராம நிர்வாக அலுவலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம்.

ஏற்கெனவே கிராம நிர்வாக அலுவலர்களின் முதுநிலை பட்டியலை கருத்தில் கொள்ளாமல், பணியில் சேர்ந்த தேதி அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மாறுதல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவது தவறு எனக் கூறி உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்தச் சூழலில் 218 காலிப்பணியிடங்களை நேரடியாக நிரப்ப முடிவு செய்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு அரசு பட்டியலை அனுப்பியுள்ளது. இதனால் இடமாறுதலுக்காக பல ஆண்டுகளாக காத்திருப்பவர்களின் வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது.

218 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை மாவட்ட பணியிட மாறுதல் மூலம் நிரப்பாமல் நேரடி நியமனம் மூலம் நிரப்ப டிஎன்பிஎஸ்சிக்கு இடைக்கால தடை விதித்தும், தகுதி வாய்ந்த கிராம நிர்வாக அலுவலர்கள் இடமாறுதல் கோரிய மனுக்களை பரிசீலித்து அவர்களுக்கு உரிய இடங்களில் இடமாறுதல் வழங்கிய பிறகு நேரடி முறையில் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்பவும் உத்தரவிட வேண்டும்’ என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதி குமரேஷ்பாபு விசாரித்தார். பின்னர் நீதிபதி, மாவட்ட பணியிட மாறுதல் நடத்தாமல் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நேரடி முறையில் டிஎன்பிஎஸ்சி நிரப்ப தடை விதிக்கப்படுகிறது. மனு தொடர்பாக வருவாய் துறை ஆணையர், டிஎன்பிஎஸ்பி தலைவர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை நவ.14க்கு தள்ளிவைத்தார்.

இருக்கும் போது
ரத்ததானம்.... இறந்த பின்
கண்தானம் செய்வீர்...

# திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் 8 ம் தேதி குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் தொடர்பான குறைதீர் முகாம் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்




திருவள்ளூர் நவ 06 :

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில், பிரதிமாதம் இரண்டாவது சனிக்கிழமைகளில் ஒவ்வொரு வட்டங்களிலும், பொது விநியோகத்திட்ட குறைதீர் முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்ற அறிவுரைகளின்படி, குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் தொடர்பான நவம்பர் 2025 மாதத்திற்கான குறைதீர் முகாம் 08.11.2025 சனிக்கிழமை அன்று வட்ட அளவில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.

மேற்படி வட்ட அளவில் நடைபெறும் குறைதீர் முகாமில் பொதுமக்கள் தங்கள் மின்னணு குடும்ப அட்டையில் திருத்தங்கள் மற்றும் புகைப்படம் பதிவு செய்தல் தொடர்பான விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன்பெறலாம்.

மேலும், தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயன்பெறும் முன்னுரிமை குடும்ப அட்டைகள் மற்றும் அந்த்யோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டை வைத்திருக்கும் குடும்ப அட்டை தாரர்கள், அக்குடும்ப அட்டையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தங்களது விரல்ரேகையை பதிவு செய்வது கட்டாயமாக்கப் பட்டுள்ளதால், இதுவரை விரல் ரேகையை பதிவு செய்யாதவர்கள் தாங்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகில் உள்ள நியாய விலைக் கடைகளில் 25.11.2025க்குள் தங்களது விரல்ரேகையை பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# செவ்வாபேட்டை ரயில் நிலையம் அருகே தண்டவாளத்தை கடக்க முயன்றபோது சரக்கு ரயில் மோதிய விபத்தில் பெண் பலி



திருவள்ளூர் நவ 05 :

திருவள்ளூர் அடுத்த செவ்வாப்பேட்டை ரயில் நிலையம் அருகே உள்ள கே டி ஜி நகரில் வசித்து வருபவர் தனசேகர். இவரது மனைவி புஷ்பா. இவர்களது மகள் அங்குள்ள அரசு பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில் புஷ்பா கடைக்குசெல்வதற்காக செவ்வாபேட்டை ரயில் நிலைய தண்டவாளத்தை கடந்து சென்றுள்ளார்.

அப்போது திருவள்ளூர் வழியாக சென்னை நோக்கி சென்று கொண்டிருந்த சரக்கு ரயில் புஷ்பா மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உடல் துண்டாகி பலியானார். தகவல் அறிந்த திருவள்ளூர் ரயில்வே இருப்பு பாதை போலீசார் விபத்தில் பலியான புஷ்பாவின் உடலை மீட்டு மிரேதப் பரிசோதனைக்காக திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

ஆந்திராவை சேர்ந்த இந்த குடும்பத்தினர் தற்போது தான் இந்த பகுதியில் குடியேறியது தெரிய வந்துள்ளது. இது குறித்து ரயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421